## Fine Top Tailors & Textailes

உங்களுக்கு தேவையான
சிறுவர் ஆடைகள்,துணிவகைகள் உட்பட
அனைத்து ரக ஆடைகளையும்
மொத்தமாகவும்,சில்லறையாகவும் பெற்றுக்கொள்வதுடன்
ஆடவர்களுக்கான ஆடைகளையும் நவீன முறையில்
தைத்துக்கொள்ளவும் நாடவேண்டிய நம்பிக்கையான
ஸ்தாபனம்.

பைன் டொப் டைலர்ஸ் & டெக்ஸ்டைல்ஸ்

*Proprietor: K. Ismath Ifthikar*

Rahmaniya Road, Eravur. Mob: 0776108172


ஒரே கூரையின்கீழ் வீட்டுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களை விலை குறைவாகவும்
தரமாகவும் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்....

***Magesitic, Textiles, Communication, Retail Shop & Shop Corner***



2B, Kayar Road, Eravur-02. Tel/ Fax: 0652240723


# முத்து நபிகளார் பற்றிய முத்துக்கள் முப்பது



தொகுப்பு :
கே.எம். அஷ்ரப் (முஸ்தபி)
ஆசிரியர் அல் மத்ரசதுத் தீனிய்யா


வெளியீடு : அல் மத்ரசதுத் தீனிய்யா,
றிபாய் பள்ளிவாயல்,
காயர் வீதி, ஏறாவூர்.02

100/-

Haani Printers, Eravur.



## NEW ABAI FASHION CHOICE



உங்கள் கண்கவர் டிசைன்களில்
அபாயாக்களை மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நாட வேண்டிய ஒரே இடம்.

A.K.M. ROAD, ERAVUR-03.
Shop Tel/077 6561644, 075 6262218
Home. 065 3064508, 075 6210398

## e- net systems



Net Browsing ,Photocopy,Fax,
E-mail,Typesetting ,softwares,Digital Printing
and visiting card

Main Street, Eravur.
Tel/ 077 02211000, 0771801888, 0652241346




# முத்து நபிகளார் பந்திய முத்துக்கள் முப்பது


வெளியீடு:
அல் மத்ரஸதுத் தீனிய்யா
மஸ்ஜிதுர் றிபாய் பள்ளி வாயல்
காயர் வீதி ஏறாவூர் -02



தொகுப்பு:
மௌலவி: கே. எம். அஸ்ரப் (முஸ்தபி)
ஆசிரியர் மத்ரஸதுத் தீனிய்யா
0770498232

## முன்னுரை

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர்ரஹீம்

சர்வ புகழும் எல்லாம் வல்ல அல்லாஹ் ஒருவனுக்கே என்றும் உரித்தாகட்டும். சலவாத்தும் சலாமும் சாந்தி நபிகளார் மீதும், அருமை சஹாபாக்கள் குடும்பத்தார் அனைவர் மீதும் என்றென்றும் சேரட்டுமாக.

இறைவனால் அனுப்பப்பட்ட இறுதித்தூதர் எம் கோமான் முஸ்தபா ஸல்லல்லாஹு" அலைஹி வஸல்லம் அவர்களின் மூலம் மனித சமூகமும் அனைத்து படைப்பினங்களும் அடைந்த பலன்வரையறுத்துக் கூற முடியாது என்பது உலகறிந்த உண்மையாகும்.

அனைத்து வேதங்களும் புராணங்களும் அனைத்து மதங்களும் அறிஞர்களும் நாயகம் ஸல்லல்லாஹு" அலைஹி வஸல்லம் அவர்கள் ஓர் ஒப்பற்ற தலைவர்! பின்பற்றப்பட வேண்டியவர்களில் இவர் முதன்மையானவர். எனும் கருத்துக்களைக் கூறும் இக்காலத்தில் நாயகம் ஸல்லல்லாஹு"அலைஹி வஸல்லம் அவர்கள்நம்மைப்போன்ற ஒரு சாதாரண மனிதர் எனும் கருத்தை மனம் தளராமலும் வாய் கூசாமலும் எமக்கிடையே சொல்லித்திரிவது ஓர் உண்மை விசுவாசியின் பண்பு அல்ல.

நாயகத்தை தரக்குறைவாகக்கூறும் இக்கால சூழலில் முஹம்மத் முஸ்தபா (ஸல்) அவர்கள் பிறந்த புனித ரபீஉல் அவ்வல் மாதத்தை முன்னிட்டு நபிகள் நாயகத்தைப் பற்றிய சில செய்திகளைத் தொகுத்து நாயகத்தின் சிறப்புக்களையும் அந்தஸ்துக்களையும் உணர்த்தி நாயகத்தின் நேசத்துக்கு வலுவூட்டும் என எண்ணியவனாக இந் நூலை உமக்கிடையே தொகுத்தளித்துள்ளேன்.

இந்நூலை வெளிவரத் துணை புரிந்த அனைவருக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்வதோடு இச்சிறு தொகுப்பைக் கொண்டு அனைவரும் பயன் பெற பிரார்ததிக்கின்றேன்.

என்றும் நன்றியுடன்...

மௌலவி : k.m அஸ்ரப் (முஸ்தபி)





## அணிந்துரை

அஸ்ஸலாமு அரைக்கும் (வறஹ்)

சகோதரர் மௌலவி கே.எம். அஷ்ரப் (முஸ்தபி) அவர்கள் பிஞ்சு உள்ளங்களில் இலகுவாக இடம்பிடிக்கும் நபிகளார் பற்றிய மென்முத்துக்கள் பலவற்றை திறன்பட கோர்த்துள்ளார்.

அண்ணலார் பற்றிய நன்மதிப்புக்களை குறைத்துமதிப்பிடும் சண்டாளர்கள் மலிந்து போன இக்காலத்தில்,அவர்களது அன்பையும் மகத்துவத்தையும் இஸ்லாமிய உள்ளங்களில் இருந்து திருடுகின்ற வழிகேடர்கள் உறுமித்திரியும் இச்சூழலில் குழந்தை உள்ளங்களை நாயகத்தின் இன்பில் வளர்த்திடவேண்டும் என்ற சகோதரர் அஷ்ரப் அவர்களின் மகத்தான முயற்சி உள்ளத்தில் பரவசத்தை ஏற்படுத்துகின்றது.

சகோதரரது முயற்சியும் ஆற்றலும் வளர்ந்தோங்க வேண்டுமென்றும் இவர்போன்று மேலும் பலர் உருவாக வேண்டும் என்றும் எல்லாம் வல்ல அல்லாஹ்வை பிரார்த்திக்கின்றேன்.

மௌலவி: P.M.A. ஜலீல் (பாக்கவி)
அதிபர்,
பைழானுல் மதீனா அரபுக் கலாபீடம்
13.02.2012





## பொருளடக்கம்

1.தாஹா நபியின் தாய் தந்தை வம்சா வழி
2.அண்ணலாரின் அருமைப் பிள்ளைகள்
3.மஹ்மூத் நாயகத்தின் மனைவிமாரர்கள்
4.நாயகத்தின் பணிவிடையாளர்கள்
5.திருத்தூதரும் திருநாமமும்
6.அண்ணலாரை நோக்கி அகிலத்தார்
7.உத்தமரும் உலுல் அஸ்மிகளும்
8.சிருஸ்டியில் சிறந்தவர் நாயகமே
9.கலீலுல்லாஹ் vs ஹபீபுல்லாஹ்
10.நாமும் நாயகமும்
11.நாயகத்தின் தடாகம்
12.கொடிகளில் சிறந்தது
13.அண்ணலார் பற்றி அறிஞர்கள்
14.பூமான் நபி பற்றி புராணங்கள்
15.நாயகதின் விடயத்தில் நாயனின் வழக்கு
16.திரு மறை கற்றுத்தரும் தீருத்தூதருடனான ஒழுக்கங்கள்
17.ஏந்தலின் எதிரிக்கு இறைவனின் சாபம்
18.நாயகத்தின் மூலம் ஜிப்ரீல் (அலை) பெற்ற றஹ்மத்
19.நாயகமும் நன்மாராயமும்
20.உத்தமரும் உடல் அமைப்பும்





21.நாயகமும் சொல் நயமும்
22.பெருமானாரின் மூலதனங்கள்
23.உத்தமரும் உணவும்
24.பயகம்பரும் பண்பாடும்
25.அண்ணலாரும் அற்புதங்களும்
26.அண்ணலாரும் அறுவை சிகிச்சையும்
27.நபிகளாரும் நபித்துவமும்
28.நாயகமும் நகைச்சுவையும்
29.ஜோதி நாயகமும் ஜீவிய காலத்தில் நடந்தவைகளும்
30.கேள்வி பதில்

## 01.நாயகத்தின் தாய் தந்தை வம்சா வழி

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பின் அப்துல்லாஹ் பின் அப்துல் முத்தலிப் பின் ஹாஷிம் பின் அப்துல் மனாப் பின் ஹுஸை பின் கிலாப் பின் முர்றா பின் க.்.ப் பின் லுஅய்யி பின் காலிப் பின் பிஹ்ர் பின் மாலிக் பின் நழ்ர் பின் கனானா பின் ஹுஸைமா பின் முத்ரிகா பின் இல்யாஸ் பின் முழர் பின் நஸார் பின் ம.்.தி பின் அத்னான்.

ஆமினா ரழியல்லாஹு அன்ஹா பின் வஹ்ப் பின் அப்துல் மனாப் பின் சுஹ்றா பின் ஹகீம.

## 02.அண்ணலாரின் அருமைப்பிள்ளைகள்

நாயகத்திற்கு மொத்தமாக ஏழு பிள்ளைகள் காணப்பட்டார்கள். அதில் மூன்று ஆண்களும் நான்கு பெண்களுமாகும்.

**1.காஸிம் (தாயார் கதீஜா நாயகி)**

- இவர்கள்தான் நாயகத்துக்கு அபுல்காஸிம் எனும் பெயர் கிடைக்க காரணமாக இருந்தவர்கள்.
- நுபுவ்வத்துக்கு முன்னரே பிறந்து அதற்கு முன்னரே இரண்டு வயதில் வபாத்தாகி வட்டார்கள்.

**2.அப்துல்லாஹ் (தாயார் கதீஜா நாயகி)**

- இவர்களை தைய்யிப் என்றும் தாஹிர் எனவும் பெயர் கொண்டு அழைக்கப்படும்.
- நுபவ்வத்தின் பின்னரே வபாத்தானார்கள்.





**3.இப்றாஹிம் (தாயார் மாரியதுல்கிப்தியா நாயகி)**

- இவர்கள் பிறந்து 70 நாட்களில் வபாத்தாகி விட்டார்கள்.

**4.செய்னப் நாயகி (தாயார் கதீஜா நாயகி)**

- இவர்களே பெண்களில் மூத்த மகள் ஆவாாகள்.
- இவர்களின் கணவர் அபுல் ஆலிப் பின் ரபீஉ என்பவராகும்.
- இவர்களுக்கு அலி, உமாமா எனும் இரு பிள்ளைகள் பிறந்தனர்.
- அலி எனும் குழந்தை சிறுவயதிலேயே வபாத்தாகிவிட்டது.
- உமாமா எனும் மகளை அலி (ரழி) அன்ஹு அவர்கள் பாத்திமா நாயகியின் வசிய்யத்தின் படி பாத்திமா நாயகியின் வபாத்தின் பின்னர் திருமணம் செய்து கொண்டார்கள்.

**5.றுகைய்யா (தாயார் கதீஜா நாயகி)**

**6.உம்மு குல்தூம் (தாயார் கதீஜா நாயகி)**

- இருவரையும் மூன்றாம் கலீபாவாகிய உஸ்மான் (ரழி) அன்ஹு அவர்கள் திருமணம் முடித்தார்கள்.
- இருவரையும் திருமணம் முடித்ததற்காகவே கலீபா அவர்கள் தின்நூரைன் (இரு ஒளியுடையவர்) என அழைக்கப்பட்டார்கள்.

**7.பாத்திமா நாயகி (தாயார் கதீஜா நாயகி)**

- நபிகளாரின் ஜீவிய காலம் வரைக்கும் எஞ்சியிருந்த பிள்ளை இவர் மட்டுமே.
- இவர்களை அலி (ரழி) அன்ஹு அவர்கள் திருமணம் முடித்தார்கள்.





## 03.மஹ்மூத் நாயகத்தின் மனைவிமார்கள்

நபிகள் கோமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வரும் வயதில் பின்வரும் 11மனைவிமார்களை திருமணம் செய்து கொண்டார்கள்

| மனைவிமார்கள் | நாயகத்தின் வயது |
|---|---|
| 1.குவைலிதின் மகள் கதீஜா நாயகி | 25 |
| 2.அபூபக்கர் (ரழி) அவர்களின் மகள் ஆயிஷா நாயகி | 51 |
| 3.சம்ஆவின் மகள் சவ்தா நாயகி | 50 |
| 4.ஹாரிதின் மகள் மைமூனா நாயகி | 50 |
| 5.உமர் (ரழி) அவர்களின் மகள் ஹப்ஸா நாயகி | 55 |
| 6.ஹுஸைமாவின் மகள் சைனப் நாயகி | 56 |
| 7.ஜஹ்சுடைய மகள் சைனப் நாயகி | 56 |
| 8.அபீ உமையாவின் மகள் உம்மு ஸல்மா நாயகி | 56 |
| 9.ஹாரிதின் மகள் ஜுவைரியா நாயகி | 58 |
| 10.அபூ சுப்யானின் மகள் உம்மு ஹபீபா நாயகி | 59 |
| 11.ஹுயையின் மகள் சபிய்யா நாயகி | 59 |

## 04.நாயகத்தின் பணிவிடையாளர்கள்

| | |
|---|---|
| 1.அனஸ் பின் மாலிக் | ரழியல்லாஹு அன்ஹு |
| 2.அஸ்ல.். பின் ஷரீக் | ரழியல்லாஹு அன்ஹு |
| 3.அஸ்மா பின் ஹாரிதா | ரழியல்லாஹு அன்ஹு |
| 4.பிலால் பின் றபாஹ் | ரழியல்லாஹு அன்ஹு |
| 5.ரபீஆ பின் க.்.ப் | ரழியல்லாஹு அன்ஹு |
| 6.அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் | ரழியல்லாஹு அன்ஹு |
| 7.மிக்தாத் பின் அஸ்வத் | ரழியல்லாஹு அன்ஹு |
| 8.முஙீறா பின் ஷு.்.பா | ரழியல்லாஹு அன்ஹு |
| 9.உக்பா பின் ஆமிர் | ரழியல்லாஹு அன்ஹு |
| 10.கைஸ் பின் சாயிதா | ரழியல்லாஹு அன்ஹு |





## 05.திருத்தூதரும் திருநாமமும்

முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வரும் திருநாமங்கள் கொண்டு அழைக்கப்பட்டார்கள்.

| | |
|---|---|
| • முஹம்மத் | அஹ்மத் |
| • ஆகிப் | மாஹி |
| • ஹாஷிர் | நபிய்யுத் தௌபா |
| • பாதிஹ் | சிராஜுன் முனீர் |
| • ரஸுல் | ஷாஹித் |
| • நபிய்யுர் ரஹ்மா | முபஷ்ஷிர் |
| • நதீர் | ரஊப் |
| • ரஹீம் | ஹாமித் |
| • தாஹா | அபுல் காஸிம் |

## 06.அண்ணலாரை நோக்கி அகிலத்தார்

உலகில் இறைவனால் படைக்கப்பட்ட அத்தனை படைப்புகளும் பின்வரும் அழகிய திருநாமங் கொண்டு நபிகளாரை அழைக்கின்றன.

| | |
|---|---|
| • சுவர்க்கவாசிகள் | அப்துல் கரீம் |
| • நரகவாசிகள் | அப்துல் ஜப்பார் |
| • அர்ஷுடைய மலக்குமார்கள் | அப்துல் மஜீத் |
| • ஏனைய மலக்குகள் | அப்துல் ஹமீத் |
| • நபிமார்கள் | அப்துல் வஹ்ஹாப் |
| • இப்லீஸ் | அப்துல் கஹ்ஹார் |
| • ஜின்கள் | அப்துர் ரஹீம் |
| • பூமி | அப்துல் காதிர் |
| • கடல் | அப்துல் முஹைமின் |

| | |
|---|---|
| • பாம்பினங்கள் | அப்துல் குத்தூஸ் |
| • பறவைகள் | அப்துல் ஹயாத்து |
| • ஏனைய உயிரினங்கள் | அப்துல்கப்பார் |
| • முஸ்லிம்கள் | முஹம்மத் |
| • அல்லாஹ் | அஹ்மத் |

அறிப்பாளர்: க·.புல் அஹ்பார் ரழியல்லாஹு அன்ஹு

## 07.உத்தமரும் உலுல் அஸ்ம்களும்

எம்கோமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அடுத்த அந்தஸ்தை பெறும் நபிமார்களையே உலுல் அஸ்ம் (திட உறுதி கொண்டோர்) என அழைப்பர்.

| | | |
|---|---|---|
| 1.ஆதம் | அலைஹிஸ்ஸலாம் | (கலீபதுல்லாஹ்) |
| 2.இப்றாஹீம் | அலைஹிஸ்ஸலாம் | (கலீலுல்லாஹ்) |
| 3.மூஸா | அலைஹிஸ்ஸலாம் | (கலீமுல்லாஹ்) |
| 4.ஈஸா | அலைஹிஸ்ஸலாம் | (றூஹுல்லாஹ்) |
| 5.நூஹ் | அலைஹிஸ்ஸலாம் | (நஜீயுள்ளாஹ்) |





## 08.சிருஷ்டியில் சிறந்தவர் நபிகள் நாயகமே!

உலகில் படைக்கப்பட்ட படைப்புக்களில் சிறந்தவைகளை ஞானவான்கள் வரிசைப்படுத்துகையில் எம் கோமான் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே முதன்மை இடத்தை வகிக்கின்றார்கள்.

1.நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்
2.ரஹ்மதுன் லில் ஆலமீன்
3.இறுதி நபி
4.உலகத்துக்கே ரசூலாக வந்தவர்
5.கலீலுல்லாஹ் (இப்றாஹிம் அலைஹிஸ்ஸலாம்)
6.உலுல் அஸ்ம்கள்
7.ரசூல்மார்கள்
8.நபிமார்கள்
9.சித்திகீன்கள்
10.ஷுஹதாக்கள்
11.முஹாஜிரீன்கள்
12.அன்ஸாரிகள்
13.சஹாபாக்கள்
14.தாபிஈன்கள்
15.குத்புமார்கள்
16.இமாமானி
17.முக்தார்கள்
18.அவ்தாத்கள்
19.அன்வார்கள்
20.ஆரிபீன்கள்
21.அக்யார்கள்
22.அப்தால்கள்
23.நுஜபாக்கள்
24.நுகபாக்கள்
25.வலிமார்கள்
26.முத்தகீன்கள்
27.சாலிஹீன்கள்
28.மு·.மின்கள்
29.முஸ்லிம்கள்
30.சாதாரன மனிதன்





## 09.கலீலுல்லாஹ் vs ஹபீபுல்லாஹ்

கலீலுல்லாஹ் என்பவர் எல்லாப் பொருட்களை விடவும் அல்லாஹ்வை தேர்ந்தெடுத்துக் கொண்டவர். மேலும் தனது தேவைகளை இறைவனிடத்தில் கேட்டுப் பெற்றுக்கொண்டவர்.

ஹபீபுல்லாஹ் என்பவர் எல்லாப் பொருட்களை விடவும் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர். கேட்காமலே அவரது தேவைகளை இறைவன் நிறைவேற்றிக் கொடுத்துள்ளான்.

| கலிலுல்லாஹ் (அல்லாஹ்விடத்தில் கேட்டது) | ஹபீபுல்லாஹ் (இறைவனாகவே கொடுத்தது) |
|---|---|
| 01.எங்கள் இறைவா! என்னையும் எனது பெற்றோர்களையும் மு·.மின்களையும் கேள்வி கணக்குடைய அந்நாளில் மன்னித்துவிடுவாயாக. 14:41 | நபியே! உங்களது முன் பின் பாவங்களை அல்லாஹ் மன்னித்து விட்டான். 48:82 |
| 02.யா அல்லாஹ்! பின்வருபவர்களிலிருந்து நீ எனக்கு நற்புகழை ஏற்படுத்துவாயாக. 28:84 | நாயகமே! உமது புகழை நாம் உயர்த்தியுள்ளோம். 94:4 |
| 03.உயிர் கொடுக்கப்படும் அந்நாளில் என்னை கேவலப்படுத்தி விடாதே! 26:87 | அந் நாளில் அல்லாஹ் நாயகத்தையும் அவர்களை ஈமான் கொண்டோரையும் கேவலப்படுத்தமாட்டான். 8:64 |





## 10.நாமும் நாயகமும்

| | நாயகம் | நாம் |
|---|---|---|
| 01 | நபிகளார் ஆமினா நாயகியின் வயிற்றில் இருக்கும் போது நபிமார்கள் சுபச் செய்தி கூறுதல். | நமது தாய்மார்கள் கர்ப்பினியாக இருக்கும் போது கெட்ட கனவுகள் தோன்றுதல். |
| 02 | நாயகம் பிறந்தவுடன் எவ்வித நோவும் கிடையாது என ஆமினா நாயகி கூறுதல். | நமது தாய்மார்களுக்கு அறுவை சிகிச்சை அல்லது மரணத்தை தழுவும் அளவுக்கு வலி ஏற்படுதல். |
| 03 | ஹத்னா செய்யப்பட்டு எண்ணெய் தலையில் வைத்து கஸ்தூரி மணம் கமழ சுஜுத் செய்த நிலையில் பிறந்தமை. | இரட்டைக் குழந்தைகள் ஒட்டிய நிலையிலும் தோற்றங்கள் வேறுபட்டும் பிறத்தல். |
| 04 | வுழு செய்து விட்டு தூங்கி எழுந்தால் வுழு முறியாது. | வுழு முறியும். |
| 05 | தூக்கத்தின் போது கண்கள் மாத்திரமே தூங்குதல் உள்ளம் தூங்குவதில்லை. | தூக்கத்தின் போது சுய உணர்வே இல்லாமல் போகுதல். |
| 06 | ஆறு நேர தொழுகை கடமை. | ஐந்து நேர தொழுகை கடமை. |
| 07 | 11 திருமணங்கள் முடிக்க மார்க்க சட்டம் அனுமதி | நான்கு திருமணங்கள் மாத்திரமே மார்க்க சட்ட அனுமதி. |
| 08 | தொழுகையின் போது நாயகம் அழைத்தால் அழைப்பை ஏற்று செல்வது கடமை. | தொழுகையின் போது யாராவது அழைத்தால் அவருக்கு பதில்கூறினால் தொழுகை முறிந்து விடும். |
| 09 | நாயகத்துக்கு தொடர் நோன்பு நோற்க மார்க்கம் அனுமதி. | அனுமதி இல்லை |

## 13.அண்ணலார் பற்றி அறிஞர்கள்

**1.**நபிகள் நாயகம் பெரிய தீர்க்கதரிசி. அவர்கள் அனுபவித்த துன்பங்களை நான் படிக்கும் போது கண்ணீர் வடித்தேன்.

-காந்தியடிகள்-

**2.**முஹம்மத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மகாபுருஷர்,மகாசூரர்,மகாஞானி,மகாபண்டிதர்,மகா பக்தர்,வியாபாரமானாலும் யுத்தமானாலும் நபிகளாரைக் கவனித்தால் அந்த விஷயத்தில் வெற்றி உறுதி.ஆதலால் அவர் மிகவும் அபிமானிக்கப்பட்டவர் ஆவார்.

-மகாகவி பாரதியார்-

**3.**ஒன்றே குலம். ஒன்றே தேவன், என்ற ஒப்பரிய கொள்கையே உலகளாவிய கொள்கையாகும்.நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறுகிய காலத்திலே அக்கொள்கைகளை உலகிலே பரப்பி வெற்றி பெற்றது மனிதர்களை சிந்திக்க வைக்கும் மகத்தான அற்புதமாகும்.

-பேரறிஞர் அண்ணா-

**4.**பூரணமான சமத்துவமும் சகோதர மனப்பான்மையும் முஹம்மதியர்களிடையே திகழவேண்டுமென்ற உண்மையை தமது வாழ்க்கை வாயிலாக முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மெய்ப்பித்து விட்டார்.
இங்கே வேறுபாடில்லை ஜாதி வேற்றுமை இல்லை கொள்கை வேற்றுமை இல்லை வர்ண வேறுபாடில்லை.

-சுவாமி விவேகானந்தர்-

**5.**தமது மக்கிளிடையே வலிமையை ஊட்டியதுடன் நம்பிக்கையையும் ஆர்வத்தையும் புகுத்தினார்.இஸ்லாத்தின் திரு நபி. வரலாற்றையே மாற்றியமைக்கும்படியான புத்துணர்ச்சியும் அவர்களிடையே ஊன்றிவிட்டன.

-பண்டிட் ஜவஹர்லால் நேரு-





**6.**உத்தம நபிகள் கோமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உலகத்தை வாழ்விக்க வந்த அருளாளர்களின் நல்லுள்ளத்திலிருந்து வந்த அறிவுரைகள் மக்களுக்கு வேறு எங்கு தேடினாலும் கிடைக்காத செல்வமாகும்.வாழ்வில் திட்டமான ஊன்று கோலாக விளங்கும் அவற்றை நம் உள்ளத்தில் மீண்டும் மீண்டும் நினைவு படுத்தி எண்ணிப்பார்த்து நம் வழியை செம்மைப்படுத்தினாலன்றி, நாம் உயர்வும்,உய்தியும் அடைதல் இயலாது.

(டாக்டர்.சுப அண்ணாமலை)

**7.**இந்த உலகத்தில் அளப்பரிய செல்வாக்குடன் பெரும் தாக்கத்தை உண்டுபண்ணியவர்களின் பட்டியலில் முஹம்மது அவர்களை முதலாவதாக நான் தேர்ந்தெடுத்தது,வாசகர்களினல் சிலருக்க வியப்பாக இருக்கும்.மற்றும் சிலர் ஏன் அப்படி? என்றும் வினவலாம்.ஆனால், சமயம்,உலகியல்ஆகிய இரு நிலைகளிலும் ஒருசேர மகத்தான வெற்றி பெற்றவர் வரலாற்றில் அவர் ஒருவரே தாம்.

எளிமையான வாழ்க்கைப்படியில் துவங்கிய அன்றைய உலகத்தின் பெரும் மதங்களில் ஒன்றை நிறுவிஅதனைப்பரப்பிய பேராற்றல் வாய்ந்த அரசியல் தலைவருமாவார்கள். அவர்கள் உயிர் நீத்து 13ஆண்டுகளுக்கு பின்னரும்அவர்களின் தாக்கம் சக்தி மிக்கதும்,எல்லாத்துறைகளிலும் பரவி நிற்பதுமாக இன்றும் விளங்குகின்றது.

(Michael h.hart)
நூலாசிரியர்
"the 100!a ranking of the most influential persons in history"





## 14.பூமான் நபி பற்றி புராணங்கள்

நபிகளார் பற்றி மகசிறிவியாசர் எனும் முனிவரால்எழுதப்பட்ட 18 புராணங்களில் ஒன்றாகிய புவிஷ்ய புராணத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

1.ஏதஸ் மினனந்தார மிலேச்ச
ஆச்சார்யன ஸமின் வித
மஹாமத் இத்கியாத
சிஷ்ய சாஹா சமின்வி
நிருஷ் சேவ ஹமாதே
மருஸ் தில நிவாசியனம்

**பொருள்:** ஓர் அந்நிய நாட்டில் ஓர் ஆன்மீக சீர்திருத்தவாதி தனது சிஷ்யர்களுடன் வருவார்.அவர் பெயர் மஹாமத். அவர் பாலைவனத்தைச் சேர்ந்தவராக இருப்பார்.

(புவிஷ்ய புராணம்,பாகம்3,சுலோகம்3,சூத்திரம்5-8)

2.லிங்க சேதி சிஹா ஹுன
சுமச்சுருதாதி ஸதூ ஷஹ
உச்சாலாலி ஸாவ பக்ஷீ
பவிஷயதி ஜனோமம
முஸலை நைஸ் மஸ்கரா

**பொருள்:**அவர் லிங்க சேதனம் (ஹத்னா) செய்யப்பட்டவராக இருப்பார். தாடி வைத்திருப்பார் சப்தம் போட்டு அழைப்பார். முஸ்லிம் என்று அறியப்படுவார்.

(புவிஷ்ய புராணம்,பாகம்3,சுலோகம்25,சூத்திரம்3)





**3.**வேத் அஹ்மத் புருஷம் மஹான்த
மாதித்ததிக் யவரன் தமஷா
பிரஸ்தாத் தமேவ்
விதித்வாதி மிருதியுமதி
நான்ய பன்தா விதியாத் அவனாய்

**பொருள்:** அறிவுக்கு ஆதாரமாக விளங்கிய அஹ்மது மேன்மைமிகு மனிதராக திகழ்வார். இருளை விரட்டியடித்த சூரியனைப்போன்று அறியாமையை விரட்டி பிரகாசமாகத் திகழ்வார். யார் அவரை அறிந்து பின்பற்றுகிறாரோ அவர் மரண வேதனையை அறியமாட்டார். மீட்சிக்கு அது தவிர வேறு மார்க்கம் இல்லை.

(யஜுர் வேதம். 31:18)

**4.**கலை மறை முஹம்ம தென்னுங்
காரணமில்லை யாகில்
உலகு விண்ணருவி திங்க
ளொளிருடுக் கணஞ்சுவர்க்கம்
மலைகட னதிபா தாளம்
வானவர் முதலாயும்மை
நிலையுற படைப்ப தில்லை
யென விறை நிகழ்த்தினானே.

**பொருள்:** நாயகத்தை படைத்திருக்காவிடின், உலகிலுள்ள வானம்,பூமி,சூரியன்,சந்திரன்,சுவாக்கம்,நரகம்,மலை,கடல்,நதி வானவர்கள் ஆகியோரை படைத்திருக்கமாட்டேன் என இறைவன் கூறினான்.

சீறாப்புராணம், விலாதத்துகாண்டம், தலைமுறைப்படலம்,
பாடல் 12

5.அலை வந்தா ஸக்பதிர் மாமவேஹ
மேகாவா சேதிஷ் ஷடோ
அஸுரா பகோண
நிரை விஷோணா அக்ணேத சாபி
ஸஹஸ் றைர் வைச்சுவாரை
நிறையும் ருதை ஹிசிகேத

பொருள்:உண்மையாளரும் மாமதே, எனக்குஅருள்புரிவார், அவர் முழுமையானவர் அவர் முழு உலகிற்கும் அருற்கொடையானவர்,புகழ் பெற்றவர்.
(திக்வேதமந்திரம் ஞக்தம்28)

## 15.நாயகத்தின் விடயத்தில் நாயனின் வழக்கு

**இப்லீஸ்:**
நாயனே! உன் நாட்டத்தில் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு நான் சுஜுத் செய்யும்படி இல்லாததால் நான் சுஜுத் செய்யவில்லை ஏனைய மலக்குகள் சுஜுத் செய்யும்படி இருந்ததால் அவர்கள் சுஜுத் செய்தார்கள்.அப்படியிருக்க நீ ஏன் என்னை சபித்து விட்டாய்?

**அல்லாஹ்:**
நீ எனது ஹபீபாகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஜோதி இலங்கிக்கொண்டிருந்த அந்த ஆதம்அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு சுஜுத் செய்ய எனது நாட்டத்தில் இல்லையென்று நீ அறிந்தது உன்னை நான் ஏவுவதற்கு முன்னரா? அல்லது நீ சுஜுத் செய்யாததற்கு பின்னரா?

**இப்லீஸ்:** ஆம், பின்னரேதான்.

**அல்லாஹ்:**
உன் அறிவுக்கு எனது ஏவல் முந்திய காரணத்தினாலும் எனது ஏவலுக்கு நீ மாறு செய்ததினாலும் எனது ஹபீபின் ஜோதிக்கு நீ மரியாதை செய்யாததினாலும்உன்னை நான் குற்றம் பிடித்து உன்னை நான் சபித்து விட்டேன்.





## 16.திரு மறை கற்றுத்தரும் திருத்தூதருடனான ஒழுக்கங்கள்

**1.நபிகளார் ஒன்றை செல்வதற்கோ அல்லது செய்வதற்கு முன்னரோ நீ எதையும் செய்து விடாதே!**
விசுவாசிகளே! அல்லாஹ்வும்அவனது தூதர் நபிகளாரும் ஒன்றை செல்வதற்கோ அல்லது செய்வதற்குமுன் நீங்கள் எதையும்முந்தாதீர்கள்.(சூறதுல் ஹுஜராத்,வசனம்1)

**2.நாயகத்தை பெயர் சொல்லி அழைக்காதே!**
உங்களில் சிலர் உமக்கிடையே பெயர் சொல்லி அழைப்பது போல நாயகத்தை அவ்வாறு அழைக்க வேண்டாம். (சூறதுன்நூர்,வசனம்63)

**3.இழிவான வார்த்தை கொண்டு அழைக்காதே!**
ஈமான் கொண்டோரே! யூதர்களின் பாஷையில் இழிவான பொருளுடைய ”ராயினா”எனும் சொல் கொண்டு நபிகளாருக்க கூற வேண்டாம்.மாறாக ”உன்லுர்னா” என்பதையே சொல்லுங்கள். (சூறதுல் பகறா,வசனம்104)

**4.நாயகத்தை கொல்லைப்புறம் நின்று அழைக்காதே!**
நாயகமே! உம்மை உமது அறைக்குப்பின்னால் கொள்ளைப்புறமாக அழைக்கிறார்களே அவர்கள் அறிவில்லாதவர்கள். (சூறதுல் ஹுஜராத்,வசனம்4)

**5.நாயகத்தோடு அமைதியாகப் பேசு!**
விசுவாசம் கொண்டோரே! நபிகளாரின் சப்தத்துக்கு மேலால் உமது சப்தத்தை உயர்த்தாதீர் உங்களில் சிலர் உரக்கப் பேசுவதைப்போல் நீர் நபிகளாருடன் பேசாதீர். அவ்வாறு பேசினால் உமதுஅமல்கள்அழிந்து விடும்.
(சூறதுல் ஹுஜராத்,வசனம்2)

**6.நாயகத்தின் அழைப்புக்கு பதில் கூறு!**
அல்லாஹ்வும் அவனது றசூலும் அழைத்தால் அவர்களுக்குபதில்கூறுங்கள்.(சூறதுல் அன்பால்,வசனம்24)





## 17.ஏந்தலின் எதிரிக்கு ஏகனின் எதிர்ப்பு

**1.அபூ லஹப் :**
நாயகத்தை நோக்கி உமது இரு கைகளும் நாசமாகட்டும். எனக் கூறுதல்.

**அல்லாஹ்:**
அபூ லஹபுடைய இரு கைகளும் நாசமாகட்டும்.
(சூறதுல் லஹப்,வசனம் 1)

**2.ஆசி இப்னு வாயில்:**
நாயகத்துக்கு காஸிம் எனும் குழந்தை பிறந்து சிறு பிராயத்தில் வபாத்தாகி விட்டது. இதன் காரணத்தினால் நாயகத்தை நோக்கி அவர் ஆண் சந்ததியற்றவர் எனக்கூறுதல்.

**அல்லாஹ்:**
யார் உங்களைப்பார்த்து ஆண் சந்ததியற்றவர் எனக்கூறினானோ அவனே ஆண் சந்ததியற்றவன் எனக்கூறுதல்.
(சூறதுல் கவ்தர்,வசனம் 3)

**3.முஷ்ரிகீன்கள்:**
நாயகத்தை நோக்கி நீர் ஓர் றசூலாக அனுப்பப்படவில்லை எனக்கூறுதல்.

**அல்லாஹ்:**
இந்த நுட்பமான அல்குர்ஆன் மீது சத்தியமாக நிச்சயமாக நீர் றசூல்மார்களில் ஒருவரே.
(சூறதுல் யாஸீன்,வசனம் 2)

**4.முஷ்ரிகீன்கள்:**
நாயகத்தை நோக்கி உம்மை உமது இறைவன் வெறுத்து விட்டான் எனக் கூறுதல்.

**அல்லாஹ்:**
நாயகமே! உமதிரட்சகன் உம்மை கைவிடவுமில்லை அவன் வெறுக்கவுமில்லை.
(சூறதுல் லுஹா,வசனம் 3)





**5.முஷ்ரிகீன்கள்:**
நாயகத்தை நோக்கி நீர் பைத்தியகாரர் என்றுகூறுதல்.
**அல்லாஹ்:**
எழுது கோலின் மீது சத்தியமாக நாயகமே உமதிரட்சகனின் அருளால் நீர் பைத்தியகாரர் அல்ல.
(சூறதுல் கலம்,வசனம் 1,2)

## 18.நாயகத்தின் மூலம் ஜிப்ரீல் (அலை) பெற்ற றஹ்மத்

உலகில் படைக்கப்பட்ட அத்தனை சிருஷ்டிகளிலும் நாயகத்தின் றஹ்மத்தைப்பெறாத எந்த சிருஷ்டிகளும் கிடையவே கிடையாது.

ஒருசமயத்தில், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வானவர் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களை நோக்கி ஜிப்ரீலே! நானோ றஹ்மதுன் லில் ஆலமீனாக இருக்கிறேனே. நீரோ உலகத்தாரில் ஒருவராக இருக்கிறீரே. என் மூலம் நீர் பெற்ற றஹ்மத் யாது? ஏன வினவினார்கள்.
அதற்கு ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள், “யாரசூலல்லாஹ்! வானவர்களுக்கெல்லாம் கற்பிக்கும் ஆசிரியராக இருந்த இப்லீஸின் நிலையே கெட்டதாகிவிட்டது.அப்படியிருக்க நீங்கள் பிறக்கும் வரை எனது இறுதி முடிவு எப்படி ஆகுமோ என நான் அஞ்சிக்கொண்டிருந்தேன்.

நாயகமே!உமது றஹ்மத்தின் மூலமாகத்தான் எனது அச்சம் நீங்கி எனது முடிவு நல்லது என நான் தெளிவடைந்து கொண்டேன்.என்னைப்பற்றி திருமறையில் பின்வருமாறு அல்லாஹ் கூறிவிட்டான். இதனாலேதான் நிம்மதியாகவும் சந்தோசமாகவும் உள்ளேன் என பதில் கூறினார்கள்.
”நிச்சயமாக திருக்குர்ஆன் மிகக்கண்ணியமுள்ள ஜிப்ரீல் (அலை) அவர்கள் மூலம் கூறப்பட்டதாகும். ஆவர் மிகவும் சக்தியுள்ளவர் அர்ஷிடத்தில் உயர்ந்த பதவியுடையவர்.”
(சூறதுத் தக்வீர்)

## 19.நாயகமும் நன்மாராயமும்

அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நெருங்கிய தோழமையினாலும் அவர்களின் மீது வைத்த நேசத்தினாலும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களினால் இவ்வுலகிலேயே சுவர்க்கவாதிகள் என நன்மாராயம் கூறப்பட்டவர்கள் பத்து பேர்களாவர்.

உலகில் இவ்வாறு தீர்ப்பு வழங்கிவிடும் அதிகாரம் நாயகத்தை தவிர வேறு யாருக்கும் கிடையவே கிடையாது. இவர்களை "அஷரதுல் முபஷ்ஷரா" என அழைக்கப்படும்.

| | பெயர்கள் | வயது | வபாத் (ஹிஜ்ரி) |
|---|---|---|---|
| 01 | அபூபக்கர் சித்தீக் (றழி) | 63 | 13 |
| 02 | உமர் (றழி) | 63 | 24 |
| 03 | உஸ்மான் இப்னு அப்பான் (றழி) | 82 | 36 |
| 04 | அலி இப்னு அபீ தாலிப் (றழி) | 63 | 40 |
| 05 | தல்ஹாபின் உபைதில்லாஹ் (றழி) | 64 | 36 |
| 06 | சுபைர் பின் அவ்வாம் (றழி) | 64 | 36 |
| 07 | அப்துர் றஹ்மான்இப்னு அவ்ப்(றழி) | 72 | 32 |
| 08 | ச.்.த் இப்னு அபீ வக்காஸ் (றழி) | 77 | 55 |
| 09 | சயீத் இப்னு சைத் (றழி) | 73 | 51 |
| 10 | அபூ உபைதாஇப்னு ஜர்ராஹ் (றழி) | 58 | 18 |





## 20.உத்தமரும் உடல் அமைப்பும்

- அவர்கள் சிவப்பு கலந்த வெண்மை நிறமுடையவர்கள்.
- அழகிய முடியுடையவர்கள்.
- அவர்களின் தாடி,தலைமுடி போன்றவற்றிலிருந்து மொத்தமாக 17 முடிகள் நரைத்துக்காணப்பட்டன.
- வட்ட வடிவமுடைய சந்திரனைப்போன்று பிரகாசிக்கும் முகமுடையவர்கள்.
- நெஞ்சு விசாலமுடையவர்கள்.அதில் அதிக ரோமங்கள் காணப்படும்.
- அவர்களின் பற்கள் ஒன்றோடொன்று சேர்ந்த அழகிய அமைப்புடையன.
- இரு உள்ளங்கைகளும் விசாலமானது.
- அவர்களின் நடையும் உடல் அமைப்பும் கம்பீரமானது.
- இரு உள்ளங்கைகளும் பட்டை விட மிருதுவானது.
- இரு கண்களும் அழகு நிறைந்திருப்பதுடன் மிகக்கூர்மையானதாகும்.





## 21.நாயகமும் சொல் நயமும்

நாயகத்தின் சொற்றொடர்கள் அனைத்தும் அனைத்து இலக்கண இலக்கிய வாதிகளின் கவனத்தையும் ஈர்க்கத்தக்கதாகும்.கேட்பதற்கு இனிமையானதாகும்.

நாயகத்தின் சொற்றொடர்கள் சில...

- ஒரு விசுவாசியின் எண்ணம் அதை செய்வதை விட மேலானதாகும்.
- மக்களை அடக்கி ஒடுக்குபவன் கடுமையானவன் அல்ல. தன் நப்சை அடக்குபவனே மேலானவன்.
- கேட்கும் செய்தி கண்ணூடாகப்பார்ப்பதைப்போல் இல்லை.
- வெட்கம் அனைத்தும் சிறந்ததே.
- உண்மையான தலைவன் என்பவன் தனது அடியாட்களைக் கொண்டு வேலை வாங்குபவன் அல்ல.தன் அடியார்களுக்காக தான் பணிவிடை செய்பவனே ஆகும்.
- உடல் ஆரோக்கியமும் ஓய்வு நேரமும் பெரும் இறை அருளாகும்.
- நல்லதைச் சொல்பவன் அதை செய்பவனைப் போன்றாவான்.
- தேனை வினாகிரி பழுதடையச் செய்வது போல கெட்ட குணம் நல்லமல்களை அழித்து விடும்
- அறிவைத்தேடுபவனும் பொருளைத்தேடுபவனும் ஒருபோதும் வயிறு நிறைய மாட்டான்.
- எல்லா கருமங்களும் எண்ணத்தைக்கொண்டே ஆகும்.





## 22.பெருமானாரும் மூலதனங்களும்

- அன்பு எனது அடிப்படை
- அறிவு எனது ஆயுதம்
- உறுதி எனது உடைமை
- ஏழ்மை எனது பெருமை
- தியாகம் எனது கலை
- உண்மை எனது வழிகாட்டி
- துக்கம் எனது துணைவன்
- ஊக்கம் எனது வாகனம்
- தியானம் எனது தோழன்
- பொறுமை எனது போர்வை
- இறை வணக்கம் எனது தியாகம்
- பணி எனது முழு நிறைவு
- தன்நம்பிக்கை எனது வல்லமை
- மனநிறைவு எனது வெற்றி
- பகுத்தறிவு எனது பக்தி

## 23.உத்தமரும் உணவும்

- இறைவன் பெயர் கூறி சாப்பிட ஆரம்பிப்பார்கள்
- பெருவிரல்,நடுவிரல்,ஆட்காட்டிவிரல் மூன்று விரல்களினாலுமே சாப்பிடுவார்கள்.
- சாப்பிட்ட பின் இதன் வரிசைப்படியே விரல்களை சூப்புவார்கள்.
- கடும் பசியின் நேரத்தில் மாத்திரமே சாப்பிடுவார்கள்.
- ஏதும் கிடைத்தால் உட்கொள்வார்கள். எந்த உணவையும் பழிக்க மாட்டார்கள்.
- பேரீத்தம் பழம்,தண்ணீரையே அதிகம் சாப்பிடுவார்கள்.
- சாப்பிட்ட பின் பாத்திரத்தை நன்றாக வழித்து உண்பார்கள். அதில் அதிக பறகத் உண்டு என உரைப்பார்கள்.
- வெங்காயம் வெள்ளைப்பூண்டு போன்றவற்றைச் சாப்பிடமாட்டார்கள்.
- உயர்ந்த இடத்தில் உட்கார்ந்து கொண்டு சாப்பிட மாட்டார்கள்.
- ஆடு,ஒட்டகம்,கோழி,மீன்,ரொட்டி,சுத்தம்பழம் போன்றவற்றை சாப்பிடுவார்கள்.
- ஒரு போதும் தனிமையில் உண்ணமாட்டார்கள்.
- பறவை இறைச்சியை சாப்பிடுவார்கள். ஆனால் பறவைகளை வேட்டையாடமாட்டார்கள்.
- உட்கொண்ட பின் தூங்கமாட்டார்கள்.
- இரவு வேளையில் இலேசானதையே உண்ணுவார்கள்.



## 24.பயகம்பரும் பண்பாடும்

- பணிவுடனே காணப்பட்டார்கள்.
- நோய் விசாரிக்க செல்வார்கள்.
- ஜனாஸாவுக்கு சமுகமளிப்பார்கள்.
- ஏழை எளியவர்களை நேசிப்பார்கள்.
- தனது பொருட்களை தானே வீட்டுக்குச்சுமந்து வருவார்கள்.
- ஏற்றத்தாழ்வின்றி ஏழைகளையும் செல்வந்தர்களையும் முஸாபஹா செய்வார்கள்.
- சந்திப்பவர்களுக்கு முதலிலே சலாம் கூறுவார்கள்.
- அழைப்புக்குப் பதிலுரைப்பார்கள்.
- தனது ஆடைகளை தானே கழுவுவார்கள்.
- ஆட்டில் தானே பால் கறப்பார்கள்.
- எவ்வித சடைவுமின்றி தனது வேலைகளை தானே செய்து முடிப்பார்கள்.
- தேவையற்றதைப் பேசமாட்டார்கள்.
- ஒரு சபையில் வெற்றிடத்திலேயே போய் அமர்வார்கள்.
- உதவிகேட்பவர்களுக்கு இல்லை எனக் கூறமாட்டார்கள்
  இல்லாத போது ஆறுதல்கூறி அனுப்புவார்கள்.
- பரிகாசமாகப் பேசினாலும் உண்மையே பேசுவார்கள்.
- தனக்குக் கெடுதியிழைத்தோருக்கு கெடுதி செய்யமாட்டார்கள்.
- யாருடனும் முகம் சுழிக்கமாட்டார்கள்.





## 25.அண்ணலாரும் அற்புதங்களும்

- அண்ணலாரின் அற்புதங்களில் பெரும் அற்புதம் அல்குர்ஆனாகும். இது உலகில் காணப்படும் மனித ஜின் வர்க்கத்தினரிடையே காணப்படும் அனைத்து இலக்கண இலக்கியவாதிகளையும் இயலாமல் ஆக்கியதாகும்.
- சந்திரனைப் பிளத்தல்.
- விரல்களிடையே நீர் ஊற்றெடுத்தல்.
- கற்கள்,மிருகங்கள்,மரம் செடி கொடிகள் அவர்களோடு பேசுதல்.
- உலகம் பூராக ஒரே சமயம் பார்த்தல், கேட்டல்.
- அலி றழியல்லாஹு அன்ஹு அவர்களின் கண்நோயை நீக்குதல்.
- ஆட்டின் வற்றிய பால்மடியில் கைவைத்தவுடன் பால் சுரத்தல்.
- ஹிஜ்ரத்தின்போது காபிர்கள் வீட்டை சூழ்ந்த வேளை அவர்களை நோக்கி மண்ணை வீசும் போது கண்பார்வை நீங்குதல்.
- ஹிஜ்ரத்தின்போது “தவ்ர்” குகையில் அபூபக்கா றழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு பாம்பு தீண்டிய போது நாயகம் தனது உமிழ் நீரினால் விசத்தை இல்லாமல் ஆக்குதல்.
- சுராகாவை பிடிக்க பூமிக்கு கட்டளையிடுதல்
- மிஃறாஜ் எனும் விண்ணுலக யாத்திரை.
- சிறிதளவு உணவில் அனைத்து சஹாபாக்களையும் உணவு உண்ணச் செய்தல்.
- உடனே துஆ அங்கீகரிக்கப்படுதல்.
- நடக்க இருக்கும் விடயத்தை முன்கூட்டியே அறிவித்தல்.





## 26.அண்ணலாரும் அறுவைச் சிகிச்சையும்

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நெஞ்சு மூன்று தடவைகள் மலக்குமார்களின் மூலமாக பிளக்கப்பட்டு இறை ஞானங்கள் புகுத்தப்பட்டுள்ளன.

1.அன்னை ஹலிமா நாயகியிடம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சிறுவராக இருந்த போது.

2.நாயகத்திற்கு 40 வயதில் நபிப்பட்டம் அருளப்பட்ட போது.

3.நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் புனித மிஃறாஜ் பயணத்தை மேற்கொண்ட போது.

”நிச்சயமாக அவர்களின் நாயகத்தின் நெஞ்சில் பிழக்கப்பட்ட தடம், கோடு போன்று காட்சியளித்துக் கொண்டிருப்பதை நான் கண்டிருக்கிறேன்.

அறிவிப்பாளர்: அனஸ் (றழி) நூல் புஹாரி,முஸ்லிம்

## 27.நபிகளாரும் நபித்துவமும்

உலகில் தோன்றிய 1,24000 நபிமார்களில் ஒருவர் மற்றொருவரை விட அந்தஸ்தில் ஏற்றத்தாழ்வு உடையவர்களாகும்.

அவர்களுக்கு இறைவனால் அளிக்கப்பட்ட இறை ஞானத்திலும் வேறுபாடுண்டு. அவ்வகையில் நபித்துவம் சல்தனத், (ஆட்சி பொறுப்பு) வேதங்கள், சுஹுபுகளும் கொடுக்கப்பட்டவர்களும் உண்டு.

இவைகள் யாவும் நபிமார்களின் அந்தஸ்துக்களை உணர்த்திக் கொண்டிருக்கின்றன.

நாயகத்தின் நபித்துவத்தையும் ஏனைய நபிமார்களின் நபித்துவத்தையும் ஒப்பீடு செய்கின்ற போது நிறைந்த வித்தியாசங்கள் உண்டு.

1.நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் துஆ செய்ததின் மூலமே அவர்களின் சகோதரர் ஹாறூன் (அலை) அவர்களுக்கு நபித்துவம் கிடைத்தது.

2.நபி யஹ்யா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு சிறுவராக இருந்தபோதே அவர்களுக்கு நபித்தவம் கிடைத்துவிட்டது.

3.நபி தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் வாரிசாகத்தான் நபி சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு நபித்துவம் கிடைத்தது.

4.நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு தொட்டில் குழந்தையாக இருக்கும் போதே நபித்துவம் கிடைத்துவிட்டது.

5.ஆனால் கண்மனி முஸ்தபா ஸலல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஆலமுல் அர்வாஹில் ஆதித்தந்தை ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் படைக்கப்படும் முன்பாகவே நபித்துவம் கிடைத்துவிட்டது.

## 28.நாயகமும் நகைச்சுவையும்

நாயகம் (ஸல்) அவர்கள் அனைத்து துறையிலும் சிறந்து விளங்கியதோடு நாட்டை ஆளும் அரசர்களுக்கெல்லாம் ஓர் அரசராக திகழ்ந்தது உலகறிந்த உண்மையாகும்.

ஒரு அரசனுக்கு எவ்வளவு "டென்ஷன்" இருந்திருக்கும் என்பதை பலநாட்டின் அரசியல் சரித்திரங்களைப் புரட்டும் போது அறிந்து கொள்ள முடிகிறது.இதன் காரணமாகவே அரசனின் அவையில் அவனை மகிழ்விக்க கவிஞர்களும் பல நகைச்சுவை கவிஞர்களும் இருந்து வந்துள்ளனர்.





ஆனால் நாயகத்தின் அவையில் நாயகத்தை மகிழ்ச்சியில் ஆழ்த்த எந்த நகைச்சுவைக்கவிஞர்களும் இருந்தது கிடையாது. மாறாக நபி(ஸல்) அவர்களே நகைச்சுவை செய்து தானும் மகிழ்ந்து சஹாபாக்களையும் மகிழ்ச்சி படுத்தினார்கள்.

நாயகத்தின் நகைச்சுவைகள் சில…

**நகைச்சுவை -01**

ஒருமுறை அலி (றழி) அவர்களைத்தேடி பாத்திமா நாயகியின் வீட்டுக்கு நாயகம் (ஸல்) அவர்கள் வரும்போது அலி (றழி) அவர்கள் அங்கு இருக்கவில்லை. உடனே

நபி (ஸல்) : பாத்திமாவே உனது கணவர் எங்கே?

பாத்திமா (றழி) : எனக்கும் அவருக்குமிடையே சிறிய பிசகுதல் கோபித்து விட்டு சென்று விட்டார். இன்று அவர் என்னிடம் தங்கவில்லை.

நபி (ஸல்) : (அருகில் இருந்தவரிடம்) அவர் எங்கு இருக்கிறார் என பார்த்து விட்டு வாருங்கள்.

பார்க்க சென்றவர் : யா ரசூலல்லாஹ் அவர் பள்ளியில் தூங்குகிறார்.

நபி (ஸல்) அவர்கள் உடனே பள்ளிவாயலுக்கு வந்து பார்க்கையில், ஹஸ்ரத் அலி (றழி)அவர்கள் மேலாடை விலகி மேனியில் மண்ஒட்டிய நிலையில் தூங்கிக்கொண்டிருந்தார்கள்.

நபி (ஸல்) : (ஒட்டியிருந்த மண்ணை தட்டிவிட்டு) மண்ணின் தந்தையே எழும்புவீராக! மண்ணின் தந்தையே எழும்புவீராக!

சிரித்தவாறே அலி(றழி) அவர்கள் எழுந்தார்கள்.





மண்ணின் தந்தையே எழும்புவீராக! என கூறுவதற்கு காரணம், வீட்டில் இருக்கும் தனது அருமை மக்களாகிய ஹஸன்,ஹுஸைன்(றழி) அன்ஹுமா இருவரையும் விட்டுவிட்டு மண்ணிலே தூங்கியதால்.

நூல்: புஹாரி,முஸ்லிம் அறிவிப்பாளர்: ஸஹ்ல் (றழி)

**நகைச்சுவை -02**

ஒரு சமயம் ஒரு சஹாபி நாயகத்திடம் வந்தார். அவர் பொது நிதியிலிருந்து நாயகத்திடம் ஒரு வாகனம் கேட்க ஆசை.

சஹாபி : நாயகமே! என்னை ஒரு வாகனத்தில் ஏற்றி விடுங்களேன்.

நாயகம் : உம்மை ஒட்டகத்தின் குட்டியின் மீது ஏற்றி விடவா?

சஹாபி : ஒட்டகத்தின் குட்டியை வைத்துக்கொண்டு நான் என்ன செய்வது?

நாயகம் : நான் உமக்கு வாகனமாகத் தரவுள்ள ஒட்டகமும் ஒரு ஒட்டகத்தின் குட்டிதானே.

நூல்: அபூதாவுத்,திர்மிதி அறிவிப்பாளர்: அனஸ் (றழி)





**நகைச்சுவை – 03**

தபூக் யுத்தத்தின் போது நபிகளார் ஓர் சின்னஞ்சிறிய கூடாரத்தினுள் தங்கியிருந்தார்கள். நாயகத்தை சந்திப்பதற்காக அவ்ப் (றழி) வருகிறார்கள்.

அவ்ப் (றழி) : அஸ்ஸலாமு அலைக்கும்.

நபிகளார் : வ அலைக்குமுஸ்ஸலாம்! உள்ளே வாருங்கள்.

அவ்ப் (றழி) : யா ரசூலல்லாஹ் நான் முழுமையாக வரவா?

நபிகளார் : முழுமையாகத்தான். வாருங்களேன். (பின்னர் உள்ளே நுழைதல்)

நூல்: அஹ்மத்,இப்னுமாஜா அறிவிப்பாளர்: அவ்ப்(றழி)

**நகைச்சுவை – 04**

நபி (ஸல்) அவர்களுக்கு முன்னால் ரொட்டியும் பழங்களும் இருந்தன. அந் நேரத்தில் சுஹைப் (றழி) அவர்கள் அங்கு சமுகமளித்தார்கள்.

நபி (ஸல்) : சுஹைபே! சாப்பிடுவீராக!

அந்த சஹாபி சாப்பிட ஆரம்பித்ததும் அவர்கள் கண்நோயால் பீடிக்கப்பட்டிருப்பதை கண்டார்கள்.

நபி (ஸல்) :சுஹைபே!உமது கண் நோயுற்றுள்ளதே!

சுஹைப் (றழி) : நாயகமே! நான் கண்ணால் சாப்பிடவில்லையே வாயினாலேதானே சாப்பிடுகிறேன்.

நூல் : இப்னுமாஜா

### நகைச்சுவை - 05

ஒரு சமயம் முஸ்தபா (ஸல்) அவர்கள் சுவர்க்கவாதிகளின் நிலை பற்றி பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது அவர்கள் சுவர்க்கவாதிக்கும் இறைவனுக்குமிடையிலான பின்வரும் உரையாடலை சஹாபாக்களுக்கு மத்தியில் எடுத்து எடுத்துச் சொன்னார்கள்.

சொர்க்கவாதி : யா அல்லாஹ்! இங்கே எனகது விவசாயம் செய்ய அனுமதி கொடு.

இறைவன் : நீ விரும்பியவாறு சுவர்க்கத்தின் இன்பங்களை அனுபவித்துக் கொண்டுதானே இருக்கிறாய்.

சொர்க்கவாதி : ஆம். ஆனாலும் நான் நிலத்தில் உழுது பயிரிட ஆசைப்படுகிறேன்.

உடனே இறைவன் அனுமதி கொடுக்க அவரும் விதை தூவினார் இருகண்களையும் மூடி திறப்பதற்குள் அந்த பயிர் விளைந்து அறுவடைக்கு தயாராகிவிடும். மலை அளவு நெற்கள் குவிந்து காணப்படும்.

இறைவன் : ஆதமின் மகனே! நீ விரும்பியதை எடுத்துக்கொள் உன்னை எதுதான் திருப்திபடுத்தப் போகிறது.

இச்செய்தியை சஹாபாக்கள் கேட்டுக்கொண்டிருக்கையில் ஒரு சஹாபி எழுந்து யா ரசூலுல்லாஹ் அல்லாஹ்வின் மீது ஆணையாக! இறைவனுடன் உரையாடும் அந்த மனிதர் குரைஷிகளில் அல்லது அன்ஸாரிகளில் ஒருவராகத்தான் இருக்க முடியும். ஏனெனில் அவர்கள்தான் விவசாயிகள் நாங்கள் விவசாயிகள் அல்ல என கூறினார். இதை கேட்டதும் நாயகம் அவர்கள் சிரித்து விட்டார்கள்.

நூல் : புஹாரி அறிவிப்பாளர்: அபூஹுரைரா (றழி)





## 29.ஜோதி நாயகமும் ஜீவிய காலத்தில் நடந்தவைகளும்

| | வயது | கி.பி | நடந்தவைகள் |
|---|---|---|---|
| 01 | | 570 | நபிகளார் பிறப்பு |
| 02 | 6 | 576 | ஆமினா மரணம்,அப்துல் முத்தலிப் பாதுகாப்பு. |
| 03 | 8 | 578 | அப்துல் முத்தலிப் மரணம்,அபூதாலிப் பாதுகாப்பு |
| 04 | 12 | 582 | சிரியாவுக்கு அபூதாலிபுடன் பயணம் |
| 05 | 20 | 590 | பிஜார் யுத்தம் |
| 06 | 22 | 592 | ஹிழ்புல் புழூல் நடவடிக்கை |
| 07 | 23 | 593 | அல் அமீன் பட்டம் |
| 08 | 25 | 595 | கதீஜா நாயகியின் சிரியாவுக்கான தூதுவராக செல்லுதல்,திருமணம் |
| 09 | 35 | 605 | க:.பா புனர் நிர்மாணம் செய்தல். |
| 10 | 36 | 606 | ஹிறாக்குகையில் அடிக்கடி தங்குதல். |
| 11 | 40 | 610 | நபிப்பட்டம் பெறுதல்,கதீஜா நாயகி,சைத்(றழி),அபூபக்கர்(றழி) இஸ்லாமாகுதல். |
| 12 | 43 | 613 | பகிரங்க இஸ்லாமிய பிரச்சாரம் |
| 13 | 45 | 615 | அபிசீனியாவுக்கான முதல் ஹிஜ்ரத் |
| 14 | 46 | 616 | பகிரங்க தொழுகை,ஹம்ஸா(றழி) உமர்(றழி) இஸ்லாமாகுதல். |
| 15 | 47 | 617 | அபிசினியாவுக்கு இரண்டாவது குழு பயணம். |
| 16 | 48 | 618 | நாயகத்தையும்,பனூஹாஷிம்களையும் பகிஷ்காரம் செய்தல். |
| 17 | 50 | 620 | அபூதாலிப்(றழி),கதீஜா நாயகி வபாத் |
| 18 | 51 | 621 | ஆமுல் ஹுஸ்ன்,தாயிப் பயணம்,அகபா உடன்படிக்கை. |





| | வயது | கி.பி | நடந்தவைகள் |
|---|---|---|---|
| 20 | 53 | 623 | நாயகத்தை கொலைசெய்ய சதி செய்தல்,ஹிஜ்ரத்செய்தல்,முதல்ஜும்ஆ மஸ்ஜிதுன்நபவி நிறுவப்படுதல். |
| 21 | 54 | 624 | நோன்பு கடமை,மதீனாவில் இஸ்லாமிய ஆட்சி,கிப்லா மாற்றம், பத்ரு யுத்தம். |
| 22 | 55 | 625 | உஹது யுத்தம். |
| 23 | 57 | 627 | அகழி யுத்தம். |
| 24 | 58 | 628 | அன்னை உம்மு ஹபீபா நாயகியை திருமணம் செய்தல்,ஹுதைபியா உடன்படிக்கை. |
| 25 | 59 | 629 | கைபர் யுத்தம். |
| 26 | 60 | 630 | ஹுனைன் யுத்தம்.இப்றாஹீம் எனும் மகன் பிறப்பு,தபூக்யுத்தம். |
| 27 | 61 | 631 | மகன் இப்றாஹீம் வபாத், மக்கா வெற்றி. |
| 28 | 62 | 632 | இறுதி ஹஜ்,அரபா பேருரை. |
| 29 | 63 | 633 | நபிகளாரின் வபாத். |



## 30.கேள்வி பதில்

1.நாயகத்தின் பாஷை கொண்டு பேசுபவர்கள் யார்?
**சுவர்க்கவாதிகள்**

2.நபி (ஸல்) அவர்களின் காதமுன் நுபுவ்வா எனும் முத்திரையை முத்தமிட்ட சஹாபி யார்?
**உக்காஷா றழியல்லாஹு அன்ஹு**

3.நாயகத்தின் பிறப்பு செய்தி கேட்டு அபூலஹபிடம் நற் செய்தி கொண்டு வந்த அடிமைப் பெண் யார்?
**துவைபதுல் அஸ்லமிய்யா**

4.கியாம நாளில் முதன் முதலாக எழுப்பப்படுபவர் யார்?
**நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்**

5.நாயகத்திற்கு அதிக காலம் பணிவிடை செய்த சஹாபி யார்?
**அனஸ் றழியல்லாஹு அன்ஹு**

6.உஸ்மான்(றழி) அன்ஹு அவர்களுக்கு தின்நூரைன் என பெயர் வரக்காரணம் யாது?
**நாயகத்தின் இரு பிள்ளைகளை திருமணமுடித்ததால்.**

7.நாயகத்தின் உற்ற நண்பர் யார்?
**அபூபக்கர் றழியல்லாஹு அன்ஹு**

8.நாயகத்தின் மனைவியரை எவ்வாறு அழைக்கப்படும்.
**உம்மஹாதுல் மு:.மினீன்**

9.நாயகத்துக்கு பாலூட்டிய பெண்மனி யார்?
**ஹலீமா நாயகி**

10.நாயகத்துக்கு வயது எத்தனை? **63**

11.நாயகத்தின் பெயர் அல் குர்ஆனில் எத்தனைஇடங்களில் உள்ளது?
**நான்கு**

12.நாயகத்தின் பேரக்குழந்தைகள் யார்?
**ஹசன் ஹுசைன் (றழி) அன்ஹுமா**

13.நாயகத்தின் முதல் மனைவி யார்?
**கதீஜா நாயகி**

14.நாயகத்தின் திண்ணைத்தோழர்களை எவ்வாறு அழைக்கப்படும்?
**அஸ்ஹாபுஸ் ஸுப்பா**

15.நாயகம் (ஸல்)

ஸல்லல்லாஹு அலா முஹம்மத்
ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

ஸல்லல்லாஹு அலா முஹம்மத்
ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

ஸல்லல்லாஹு அலா முஹம்மத்
யாரப்பி ஸல்லி அலைஹி வஸல்லம்

அல் மத்ரஸதுத் தீனிய்யா
மஸ்ஜிதுர் றிபாய் பள்ளி வாயல்
காயர் வீதி ஏறாவூர் -02



POOVER CITY

Whole sale & Retails of fancy &House hold items
உங்கள் வீட்டு உபகரணங்கள், பாடசாலை உபகரணங்கள் என்பவற்றை
ஒரே கூரையின் கீழ் மொத்தமாகவும் சில்லறையாகவும் ,நியாயமான விலைக்
கழிவுடன் பெற்றுக்கொள்ள வேண்டிய ஒரே இடம்.



A.K.M. ROAD, ERAVUR-03. TEL/ 0653653485
0652240927

NEW OPPTICALS

உங்களின் விருப்பத்திற்கேற்ப
நவீன வடிவிலான தரமான
பிரேம்களையும், கண்வைத்தியரினால்
வழங்கப்படும் நோய்க்குரிய கண்ணாடிகளையும்
மிகக்குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஒரே இடம்.



84,Odaviyar Road, Eravur-2c.
Mob.077 5788638, 075 6790318